# 13 வானில் ஒரு பவனி

மேகம்! மேகம்! வானம் முழுதும்
மேகக் கூட்டம்! பார்த்தாயா!
ஆகா! ஆகா! ஆனைகள் போல் அவை
அசையும் அழகைக் கண்டாயா!

கடலின் நீரில் பிறந்த மேகம்
காற்றில் சவாரி செய்கிறது!
உடலும் கறுத்து உப்பிப் பருத்து
உயர எழுந்து வருகிறது!

வானம் ஊதிய பெரிய பலூன்கள்!
வயிறு பெருத்த பூதங்கள்!
எரியும் மலைகள்! காண்டா மிருகம்!
இப்படி எத்தனை உருவங்கள்!


சூரியத் தேவன் தூரிகை கொண்டு
ஓவியம் அங்கே தீட்டுகிறான்!
வெள்ளி உருக்கி அள்ளி எடுத்து
மேக விளிம்பில் பூசுகிறான்!



மேகம் திரண்டு மின்னிச் சிரித்து
வானில் பவனி வருகையிலே
தாகம் தணிந்து பூமி செழிக்கத்
தன்னை மழையாய்த் தருகிறது!

உருவம் கரிய நிறம் என்றாலும்
உள்ளம் அதற்கு வெள்ளையடா!
உயர்ந்தோர் தாழ்ந்தோர் எல்லோருக்கும்
ஒன்றாய் மழையைப் பெய்யுமடா!

ஒன்றினை ஒன்று மோதி விலக்கி
ஓடும் மேகம், மலை மேலே
சென்று படுத்தும் உருண்டு புரண்டும்
சிறுவர் போல விளையாடும்!



-வ. இராசையா-
'அரவிந்தம்'

## சொல் அறிமுகம்

### වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | மேகம் | - | වලාකුළු |
| 2. | சவாரி | - | ගමන් |
| 3. | பருத்து | - | මහත් වී |
| 4. | பூதங்கள் | - | භූතයා |
| 5. | தூரிகை | - | පින්සල |
| 6. | வெள்ளி | - | රිදී |
| 7. | பவனி | - | සංචාර |


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.

1. மேகக் கூட்டம் எங்கே காணப்பட்டது?
2. மேகம் எவ்வாறு அசைந்து சென்றது?
3. பாடலில் மேகங்கள் எத்தகைய வடிவங்களில் காட்சியளித்தன?
4. மழையினால் நாம் பெறும் பயன்கள் இரண்டினை எழுதுங்கள்.
5. ‘‘உருவம் கரிய நிறம் என்றாலும் உள்ளம் அதற்கு வெள்ளையடா’’ என்ற வரிகளில் இருந்து நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?

### *செயற்பாடு - I*

**இசையோடு பாடுங்கள்.**

### *செயற்பாடு - II*

**பின்வரும் வெற்றிடங்களைப் பாடலைப் பார்த்துப் பூர்த்தி செய்வோம்.** පහත සඳහන් හිස්තැන් කවිය බලා පුරවමු.

1. கடலின் நீரில் ........................ மேகம்.
   காற்றில் ........................ செய்கிறது.
   உடலும் ........................ உப்பிப் ......................
   ............................. எழுந்து வருகிறது.

2. சூரிய தேவன்...................... கொண்டு
   ஓவியம் அங்கே.....................
   ............................. உருக்கி அள்ளி எடுத்து
   ............................. விளிம்பில் பூசுகிறான்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - III

**பின்வரும் சொற்றொடர்களை வைத்து வாக்கியம் எழுதுவோம்.**

1. உருண்டு புரண்டு

   ..........................................................................

2. உயர்ந்தோர் தாழ்ந்தோர்

   ..........................................................................

3. அள்ளியெடுத்து

   ..........................................................................

4. தாகம் தணிந்து

   ..........................................................................

5. உயர எழுந்து

   ..........................................................................

## செயற்பாடு IV

**பொருத்தமான சொற்களைத் தெரிந்து எடுத்து பின்வரும் கவிதையைப் பூர்த்தி செய்வோம்.**
**සුදුසු වචන යොදා පහත දී ඇති කවිය සම්පූර්ණ කරන්න.**

**(சுற்றி, ஒன்றாய், தாய்நாடு, காட்சிகள், நாடு)**

........................வரவும் கடலால்
சூழ்ந்த ........................ நம் நாடு
அற்புத இயற்கைக் .........................
அமைந்த நாடு நம் நாடு
ஒற்றுமை கொண்டு மாந்தர்
.............................. வாழும் நம் நாடு
சொற்களில் விளக்கிட முடியா
சொர்க்கம் சொர்க்கம் .........................



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு V

பின்வரும் கவிதையைப் பூர்த்தி செய்வோம்.
**පහත දී ඇති කවිය සම්පූර්ණ කරමු.**

அம்மா எந்தன் அம்மா
அன்பு மிக்க அம்மா
....... .......... ........
........ .......... ........

## செயற்பாடு VI

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து சிறிய கவிதை ஒன்றை எழுதி வகுப்பறையில் வாசித்து காட்டுங்கள்.
**ඔබ කැමති සරල කවියක් ලියා කියවන්න.**

★ பூக்கள்

★ சந்திரன்

★ கடல்

★ சூரியன்

★ காற்று